ஞாலகுருவின் படைப்புக்கள்

# கபாடபுரத்துக் கருவூரர் வருகை



மனித உள்ளத்தில் வறுமை, வெறுமை, அடிமை, மிடிமை, இல்லாமை, இயலாமை முதலியவற்ருல் இழிவழிவில் நாட்டமும், நம்பிக்கையும் ஏற்பட்டு விடாமல் தடுத்துக் காப்பதே இந்துவேதம்.

அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞாஞச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்.
(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் கோயில் கொண்டருளுபவர்)

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,123 ஆனி மாதம்.

இந்து இலக்கியக் கழக வெளியீடு

# உள்ளுறை

1. **"கபாடபுரத்துக் கருவூரர் வருகை"** - ஏழாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகிய கபாடபுரத்துக் கருவூரர் அவர்கள் குருதேவரை தலைமைப்பீடம் வந்து சந்தித்த போது குருதேவரும் அவரும் உரையாடிக் கொண்டதை குருதேவரே கூறியதன் பதிப்பு இந்தக் கட்டுரை.
2. **"உகஅற நாயகியின் பரிந்துரைகள்"** - மதுரைச் சித்தரடியான் திரு. கேசவன் அவர்களுக்கு குருதேவர் அவர்கள் உகஅற நாயகி வழங்கிய பரிந்துரைகளை விவரித்து எழுதிய அஞ்சல்.
3. **"அ.வி.தி. சுற்றுப்பயண நடைமுறைகள்"** - வேம்படிதாளச் சித்தரடியான் திரு. வெங்கடேசன் அவர்களுக்கு அருட்பணி விரிவாக்கத் திட்டத்தின் கீழ் நடத்தப்படும் சுற்றுப்பயணங்களில் பின்பற்ற வேண்டிய சில நடைமுறைகளை விவரித்து குருதேவர் எழுதிய அஞ்சல்.
4. **"இருக்கு வேதம் காண்டம்: 1, மண்டலம்: 2, நாள் உரைக்கோவை வாசகங்கள்: 1 முதல் 48 வரை"** - குருதேவர் வழங்கிய இந்துவேத வாசகங்களில் ஒரு தொகுப்பாக இருந்த வாசகங்கள்.
5. **"குருபாரம்பரிய வாசகங்கள்"** - குருதேவர் எழுதிய அஞ்சல் ஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட சில குருபாரம்பரிய வாசகங்கள்.

# கபாடபுரத்துக் கருவூரர் வருகை

## குருதேவரும் கபாடபுரத்துக் கருவூரரும் உரையாடிக் கொண்டது.

**நாள்:** 20-09-1988 ஞாயிறு.

**இடம்:** குருதேவரின் தலைமைப்பீடம், ESI மருத்துவர் குடியிருப்பு, செம்பியம், சென்னை-11.

நேற்று இரவு 20-9-1988 ஞாயிறு இரவு ஏறத்தாழ 10 to 10:30 உள்ளாக கபாடபுரத்து கருவூரர் குருதேவர் இருக்கும் தலைமைப்பீடம் வந்து சேர்ந்தார்.

குருதேவரின் பூசை அறைக்குச் சென்று பார்த்து விட்டு கடும் கோபமாக வந்து "ஏனடா? யாரடா அங்கே பூசை செய்வது? எப்படிப் பூசை செய்வது என்பதெல்லாம் இல்லையா? இதுதான் பூசை செய்யும் இலக்கணமா?" என்று கன்னபின்ன என்று பேசிய பிறகு நான் பூசை அறையை சென்று பார்க்க நேரிட்டது! அங்கு சன்னிதான உடை இல்லாமலேயே பூசைகள் நடந்து கொண்டிருந்த காரணத்தினால் உடனடியாகப் பூசையை நிறுத்தச் சொல்லி விட்டு முற்றத்திலேயே உட்கார்ந்து அவரோடு பேச ஆரம்பித்தேன். நான் எவ்வளவோ சமாதானம் சொல்லிய பிறகுதான் தேறினார்.

பிறகு அவரிடம் "என் உடம்பு இப்படி இருக்கிறதே. உடம்பு இரண்டாகப் பிளந்தால் கூட 2½ மணி நேரத்திற்குள் ஒன்று சேரச்

செய்யக்கூடிய பச்சிலைகள் எல்லாம் இருக்கின்றனவே! நான் ஏன் அவைகளை பயன்படுத்தக் கூடாது? எனக்கு ஏன் இவ்வளவு சோதனை? எத்தனையோ தைலங்கள் எனக்குத் தெரியுமே! எத்தனையோ மருந்துகள் எனக்குத் தெரியுமே! ஏன் அவற்றை நான் பலிதமாக்கிக் கொள்ளக் கூடாது? என் கால் புண்ணை உடனே ஆற்றிக் கொள்ள முடியாதா? ஏற்கனவே ஒரு விரலை இழந்தது போல் என் காலையே இழக்க வேண்டிய நிலை இப்போது வந்து விட்டது என்று சொல்லி விட்டுப் போயிருக்கிறார்கள். இங்கேயே அருகில் இருக்கக் கூடிய, மதியத்திலே வந்த டாக்டர் சொக்கலிங்கம், அவருடன் வந்த வரதராசன் ஒரு பெரிய அறுவை மருத்துவரும் காலுக்கே ஆபத்து என்று சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்களே!

“நான் திக்குத் தெரியாமல் இருக்கிறேனே! என் பெண்டாட்டி பிள்ளைகளை எல்லாம் விட்டுவிட்டு காட்டில் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறீர்களா? அப்படி எதிர்பார்ப்பதென்றால் ஒரே முடிவாகச் சொல்லிவிட வேண்டியதுதானே! நான் காலில் செருப்பு இல்லாமல் கூட 36 வயது வரை திரிந்தேனே! காலெல்லாம் பிளந்து கிடந்தது. ஒரு நோய் நொடி இல்லை; வெயிலில் காய்ந்தேன், மழையில் நனைந்தேன், நினைத்த இடத்தில் படுத்துக் கிடந்தேன். கிடைத்ததைச் சாப்பிட்டேன். எவ்வளவு வேண்டுமென்றாலும் சாப்பிட்டேன். அப்படி இருந்த உடம்பு இப்பொழுது இப்படியாகி விட்டது. திரும்ப எனக்கு அந்த உடம்பு கிடைக்காமல் போய்விடுமோ என்று ஒரே ஏக்கமாக இருக்கிறதே!

“இல்லையெனில் துணிந்து நவபாசாணத்தை எடுத்து வைத்து சாப்பிடட்டுமா? எனக்கு மகன்கள் எல்லாம் சிறுபிள்ளைகளாக இருக்கிறார்கள்; மனைவிக்கு பக்க பலம் கிடையாது; மனைவி மகன்களைத் தனியாக விட முடியாது. நான் நவபாசாணம் சாப்பிட்டால், தயாரானால் என் உடம்பு என்ன ஆகும்? பழைய வெறி உணர்ச்சி மற்றவை

வருமா? நான் இந்த உலகியலில்தான் இருக்க வேண்டுமா? நான் இப்படி நோயாளியாக இருப்பதினுல் என்ன பயன்? நானே நோயாளியாக இருக்கின்ற போது யாருக்கு என்ன செய்ய முடியும்? இதெல்லாம் என்ன கூத்து?" என்று கேட்டேன்.

அதைக் கேட்ட உடன் பொறுமையாக இருந்து விட்டு அவர், "நீ இப்பொழுதுதானே கேட்கின்ருய். இத்தனே நாள் இதற்கு முன் என்ன செய்தாய்? தஞ்சைத் தாத்தா எவ்வளவோ தடுத்தாரே உன்னே யார் அரசயோகம் செய்யச் சொன்ஞர்கள்? அவரே செய்து முடிக்க முடியாததை நீ செய்து முடித்தாய் என்பது பெருமைதான். ஆஞல் செய்யும்போதே உனக்கு ஆபத்து வந்து இருந்தால் யாருக்குக் கேவலம்? 12வது பீடாதிபதியைக் காக்கத் தவறியதாகத்தானே ஆகிவிடும்! ஆஞல் அவர் எவ்வளவோ சொல்லியும் அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானப் பூசை செய்தாய். நீ பாட்டுக்கு விளேயாட்டுப் போக்கில் விண்வெளி போய் எல்லோரையும் இழுத்து விட்டு வந்து விட்டாய்! இன்றைக்கு யார் தேர் ஏறி சண்டைக்குப் போயிருக்கிருர்கள்? சண்டைக்குப் போனவர் ஒரு மனேவி இல்லே, மூன்று மனேவிகளேயும் கூட்டிக்கொண்டு போயிருக்கிருர். எவ்வளவு தைரியம் இருந்தால் இன்றைக்கு விண்வெளியிலே போயிருப்பார்? உனக்காகத்தானே சண்டை போடுகிருர்?

"அவர் இல்லாத நேரத்திலே ஏதாவது தப்புத் தண்டா செய்து நீ மாட்டிக் கொண்டால் என்ன ஆகும் என்று பயப்படுகிருர். உனக்கு உடம்புத் தெம்பு இருந்தால்தானே இந்த அட்டகாசம் எல்லாம் செய்கிருய். உன்னே நோயாளியாக முடக்கிப் போட்டு வைத்திருக்க வேண்டும் என்று நினேக்கிருர். அதில் என்ன தப்பு இருக்கின்றது? நீ அவரைக் கேட்டால் உனக்கு ஒரு நொடியில் நலம் வராதா? ஏன் அதற்குப் போய் தடுமாறுகிருய்? உன்னேப் பாதுகாக்க வேண்டுமென்ருல் நோயைக் கொடுத்துத்தான் பாதுகாக்க

வேண்டும் என்ற முடிவுக்கு வந்து விட்டார். ஒரே இடத்தில் இருந்தால்தான் எழுத முடியும். இதையெல்லாம் உத்தேசித்துத்தான் செய்திருக்கிறுர்.

“இதற்கு மர்ம நோய் என்று சொல்லுவது. நீரிழிவு ஒன்றும் பெரிய நோயில்லே. இதைச் சரி செய்து கொள்ளலாம். இதற்கு பச்சிலேகள் இருக்கின்றன. இதற்கு ஆட்களெல்லாம் இருக்கிறுர்கள். நீ காட்டிற்கோ, மேட்டிற்கோ சென்றுல் ஒரே சூரணத்தில் கூட சரி செய்து விடலாம். அதற்குப் பிறகு உன் நிலேமை என்ன? ஊழ்வினே விதியை நம்புகிறுய் இல்லேயா? அப்படியெல்லாம் நீ நினேப்பது போல் மோசமாகி விடாது. அமைதியாக இரு. பெரிய ஆபத்து எதுவும் வந்து விடாது”.

அதற்கு நான் கேட்டேன்: “நீங்கள் அருவமாக வந்து இருப்பது போல் நானும் அருவமாக வந்துதான் எதையும் செய்ய வேண்டுமா? உருவமாக இருக்கிற காலத்தில் எதையும் செய்ய முடியாதா? நான் எவ்வளவு காலம் வாழ வேண்டும் என்று நீங்கள் நினேக்கிறீர்கள்? நான் எவ்வளவு காலம் வாழ வேண்டும் என்று இன்னும் முடிவு செய்யவில்லே. இந்த உடம்போடு உயிரோடு வாழ்வதை சுமையாகக் கூட நினேக்கிறேன். நினேத்ததை சாப்பிட முடியவில்லே, நினேத்த இடத்திற்குப் போக முடியவில்லே, விரும்பியதைச் செய்ய முடியவில்லே. நான் இப்படி இருந்து என்ன பயன்?

“காயகல்பம் தெரியும்; காயசித்தி தெரியும்; ககனத்தில் பறக்க முடியும்; நினேத்த இடத்திற்கு போக முடியும்; <u>கூடு விட்டு கூடு பாய முடியும்; உடம்பைக் கணுக்கணுவாகப் பிரிக்க முடியும்;</u> இவ்வளவு ஆற்றல் படைத்த நான் நோயாளி என்று படுத்த படுக்கையாக இருந்தால் எவ்வளவு கேவலம். வேலே பார்த்துத்தான் சாப்பிட வேண்டும் என்ற நிலேமை இருக்கிறது! வேலேக்குப் போக முடியாத நிலேமை இருக்கிறது. குளிக்கக் கூட இரண்டு பேர்

தேவைப்படுகிறது! அப்புறமென்ன நான் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி என்று இருப்பது? அப்படி ஓகோ என்று வாழ்ந்து எனக்கு அதிகாரம் இருந்தும்; எதையும் அனுபவிக்க முடியவில்லை. இப்படி ஒரு வாழ்க்கை எனக்கு தேவைதானா?

"இல்லை... உடனே தவத்தில் உட்கார்ந்து, ஞான தவத்திலும், மோன தவத்திலும் உட்கார்ந்து எனக்குள் அக்கினியை உண்டாக்கி என்ன என்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்து விடட்டுமா? அப்புறம் நீங்கள் எல்லாம் உங்களை எல்லாம் கேட்கவில்லை எனச் சொல்லக் கூடாது."

"இப்பத்தான் கருகுலம் அமைத்து இருக்கிறேன். அதைக் கட்ட என் கையில் காசு இல்லை! பாதியில் கட்டி நிற்கிறது! அதைப் போய்ப் பார்க்க எனக்கு கால் இல்லை! கையில் காசு இல்லை! இந்த நிலைமை தேவைதானா? இப்பவே உங்களுக்குத் தெரியும்; நிலவறையில் இருக்கக் கூடிய புதையல் எடுக்கலாம். ஏன் எடுக்காமல் இருக்கிறேன். இல்லை இப்பொழுதுதான் இந்த குலுக்கலில் திடீர் திடீரென்று பரிசு எல்லாம் கொடுக்கிறார்கள்! நான் ஏன் அதை என் பெயருக்கு விழ வைத்துக் கொள்ளக்கூடாது? இதை மட்டும் தடுக்கிறீர்களே, நியாயமா? உலகறிய ஒரு சீட்டு வாங்கினால் போதும், பல லட்ச ரூபாய் கிடைக்கும். அதை ஏன் எனக்கு கிடைக்க விடக் கூடாது, இல்லை நானே என் மந்திரத்தில் கட்டி ஏன் வாங்கிக் கொள்ளக் கூடாது. அதை சரியில்லை என்று சொல்கிறீர்கள். குதிரை பந்தயத்திலும் பணம் கட்டக் கூடாது. சரி அதை விட்டுவிடலாம். நாமே ஏன் அரசே நடத்தும் சீட்டில் பணம் கிடைக்க வைக்கக் கூடாது; ஆங்காங்கு பேய் பிசாசு காத்துக் கொண்டு இருக்கும் புதையலை ஏன் எடுக்கக் கூடாது?" அப்படி என்று எல்லாம் கேட்டேன்.

**அதற்கும் கபாடபுரத்துக் கருவூருர்**, "பொறுமையாக இருப்பா. இடையில் எத்தனை பீடாதிபதிகள் இருக்கிருர்கள்! தாமிரபரணி ஆற்றங்கரைக் கருவூருருக்கும் உனக்கும் ஆகவில்லை. வைகை ஆற்றங்கரைக் கருவூருர் பேச மாட்டேன் என்கிருர். அமராவதி ஆற்றங்கரைக் கருவூருர் உன்ஞல் இருந்த கருவறையை விட்டு எழுவாண்டியம்மன் கோயிலில் குலக்கொடியில் போய் இருக்கிருர். அவரைக் கேட்டால் பேச மாட்டேன் என்கிருர். உன் அப்பாவும் பேச மாட்டேன் என்கிருர். இப்பொழுது இவர்கள் எல்லாம் இருப்பிலே இருக்கிருர்கள். நான் எத்தனையோ இலட்ச ஆண்டுகளுக்கு முந்திய ஆள் வந்து நான் என்ன செய்வது? நீ கட்டிக் கொண்டு இருக்கக் கூடிய கருகுலம் குமரி ஆற்றங்கரையில் அமைத்தது போல இருக்கிறது! இது எதை வைத்து அமைத்தாய்? இது எப்படி உனக்குத் தெரியும்? இதை எல்லாம் உன்ஞல் உயிர்ப்பிக்க முடியுமா?" என்று கேட்டார்.

**குருதேவர்**:- "உங்களுக்கு முன்ஞல் இருந்து குருபாரம்பரியம் எழுதப்படுகிறது, இல்லையா? நான் பீடாதிபதி என்கிற முறையில் குருபாரம்பரியம் இளமையில் படித்தேன். நான் செய்த தப்பு நான் புரிந்து கொள்ளவில்லை! பெரும்பாலான ஏடுகளை எரித்து விட்டேன். எனக்கு விரோதி யாரும் வந்து விடுவான், அப்புறம் சண்டை போட வேண்டியிருக்கும் என்று ஏடுகளை எரித்து விட்டேன். இப்பொழுது நான் எடுத்துப் பார்க்க வேண்டும் என்ருல் கூட ஏடுகள் கிடையாது.

"இந்த ஏடு கங்கை கொண்ட சோழபுரத்தில் இருக்கிறது, மாளிகை கோட்டத்தில் இருக்கிறது, சீர்காழி, திருநெல்வேலி நான் போய்க் கேட்டால் கூட தர மாட்டேன் என்கின்ருனே. என்ன பயன் ஏட்டில் எழுதி இருப்பதற்கு? நிலவறைக்குள் இருக்கின்றது. திபெத்திற்கு சென்றேன், கிடைக்க வில்லை. இலங்கைக்கு சென்றேன்,

தரமாட்டேன் என்று கூறிவிட்டான். நேபாளத்தில் ஏடு கிடைக்க வில்லை. இலங்கை நிலவறையில் நிலவறைக்குள் இருந்தும் என்ஞல் எடுக்க முடியவில்லை! அப்பொழுது என்ன செய்வீர்கள்? நான் என்ன செய்வது? கபாலிகர்கள் இருக்கும் ஆப்பிரிக்காதான் போக வேண்டும். இப்பொழுது போஞல் என்ன ஆபத்து வரும் என்று எனக்கு என்ன தெரியும்?

“இப்பொழுது நான் பெண்டாட்டி பிள்ளையோட இருக்கிறேன். எதையும் செய்ய பயப்படுகிறேன். கோழையாகி விட்டேன். மத யானை வந்தால் கூட ஓடிப் போய் மேலே விழுந்து துதிக்கையில் புரண்டு கொம்பில் ஏறி உட்காரக் கூடியவன் நான். இன்று நான் சும்மா சாலையில் செல்லும் மாடு கொம்பை ஆட்டிஞல் கூட பயந்து ஓடி விடுகின்றேன். நான் ஏன் இப்படி கோழையானேன்? இதற்கு எல்லாம் காரணம் என்ன? எப்படி வீரஞக இருந்து அருளாட்சி அமைப்பது? அதெல்லாம் உங்களுக்குப் புரியாததா? இல்லை, நீங்கள் கூடவே இருக்கின்றீர்களா? என்ன சொல்கிறீர்கள்?” என்று கேட்டேன்.

**கபாடபுரத்துக் கருவூரார்**: “அடே அப்பா! நீ கேட்கிறது எல்லாம் எனக்குப் புரியவில்லை. உன் அப்பா எங்கேயோ போய் இருக்கிருர். நான் இதை எல்லாம் அவரிடம் கேட்டுவிட்டுச் சொல்கிறேன். அவசரப்படாதே, இது தாஞகக் கனிய வேண்டும், தடியால் அடித்துக் கனியாது. இந்த நாட்டில் நீ தேர்ந்து எடுக்கிறவன் சின்ன ஆளோ, பெரிய ஆளோ, கிழவஞே, குமரியோ யாராக இருந்தாலும் உன் கொள்கையைப் புரிந்து கொள்ளும் அளவிற்கு தயார் செய், போதும். விரல் விட்டு எண்ணும் அளவிற்கு ஊருக்கு சில பேர் என்று தயார் செய். அவர்களைத் தயார் செய். நீ ஊரைப் பூராவும் ஒன்று சேர்க்க முடியாது. அது எல்லாம் நடக்காது. ‘யானைப்

பசிக்கு சோளப் பொறி' ஆகும். நீ உனக்குத் தேர்ந்தெடுத்த ஆட்களைத் தயார் செய்.

"போருக்குப் போகின்றவன் ஒரே ஒரு வாள்தான் இடுப்பில் கட்டி இருப்பான். ஒரே ஒரு குத்துக் கத்தி, ஒரே ஒரு வேல்தான் கையில் வைத்து இருப்பான். அதைப் போல நீ உனக்கென்று சில பேரைத் தேர்ந்து எடுத்து ஆட்களைத் தயார் செய்து விடு. உன்னுடைய தவக்கோலப் படம் வைத்து இருக்கிறாய் அல்லவா? ஏதோ எந்திரத்தில் எடுக்கும் படம் என்று சொல்கிறாயே, உன்னுடைய அடியான்களுடைய படத்தையும் இணைத்து யோகம், தவம், மோனம் செய்யச் சொல்.

"இல்லையெனில் உடலை ஒளி உடலாக ஆக்க இரண்டு குத்து விளக்கு இடையில் அகல் விளக்கு வைத்துப் பூசை செய்யச் சொல். ஞானக் கண்ணைத் திறந்து விடு. பிடரிக் கண்ணைத் திறந்து விடு. விளக்கை ஏவல்பட செய்யச் சொல். சுடலைக்குக் கூட்டிச் சென்று ஏமத் தீயை எழுப்பு. அதை அசைந்து அசைந்து போகச் சொல். அந்த அளவிற்குப் பயிற்சி பெற்றவர்கள் தயாராகி விட்டால் எதையும் நீ செய்யலாம்.

**"யாராக இருந்தாலும் சன்னிதான உடை கட்டியே ஆக வேண்டும் என்று சொல். காயந்திரி சொல்லியே ஆக வேண்டும். அருட்சினை மந்திறம், சிவபுராணம் பாடியே ஆக வேண்டும். மாணிக்க வாசகரின் திருவாசகத்தோடு கருக்கள், திருக்கள், தருக்கள், குருக்கள் சொல்லக் கூடிய திருவாசகத்தையும் சொல்லச் சொல்ல வேண்டும். மந்திரங்கள் எல்லாம் சொல்லி பயிற்சி பண்ணியே ஆக வேண்டும். அவன் யாராக இருந்தாலும் 1 சாம நேரம் பூசையில் உட்கார வேண்டும். குருவை முழுக்க நம்பி புரிந்து கொள்ளத் தெரிய வேண்டும்.**

"அப்படிப்பட்டவர்களை தயாரித்த பிறகுதான் தமிழ் நாட்டைத் தயாரிக்க முடியும். தமிழ் நாட்டைத் தயாரிப்பது என்பது அவ்வளவு எளிதல்ல. ......... *[ஒரு வரி பக்கத்தின் கடைசியில் தெரியவில்லை]* .... எங்க காலத்தில் பார்ப்பான், பார்ப்பான் இல்லாதவன் என்ற தகராறு கிடையாது. இன்று இருப்பது போல கிறித்தவன், முசுலீம் என்று எல்லாம் கிடையாது. எனவே இது எல்லாம் புதுப் பிறச்சினையாக இருக்கிறது. அமராவதிக் கருவூருருக்கு இருந்த சிக்கல் வேறு; தஞ்சைக் கருவூருருக்கு இருந்த சிக்கல் வேறு. இன்றைக்கு உன் காலத்தில் புதுப் பிறச்சினை தனியா இருக்கின்றது. ஆக இந்த மூன்று சிக்கலிலும், எல்லாவற்றிலும் பார்ப்பான் வருகிறான். அவனை எப்படி வெற்றி கொள்வது என்பது யோசிக்க வேண்டும்.

"உன் ஆட்கள் பார்ப்பனனை வெறுக்க நிச்சயம் தயாராக இருக்க வேண்டும். எத்தனை கொலை வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருக்க வேண்டும். மனம் பேதலிக்காத அளவு இருக்க வேண்டும். அந்த அளவுக்கு இருந்தால்தான் அவர்களை வைத்து எதையாவது செய்ய முடியும். கோழைகளை வைத்து ஒன்றும் செய்ய முடியாது. கூலிக்காரனை வைத்து ஒன்றும் செய்ய முடியாது.

"சொந்தபந்தப் பாசம் நிறைந்தவர்களை வைத்து நீ என்ன செய்யப் போகிறாய்? ஈர விறகை அடுப்பில் வைத்தது போல்; அவன் அவன் அப்பன், ஆத்தாள், பெண்டாட்டி, பிள்ளை, அண்ணன், தம்பி என்று நினைத்துக் கொண்டிருப்பவன் ஈர விறகு போன்றவன். அடுப்பெரிக்கின்றவன் கண்ணை ஈர விறகு கெடுப்பது போல் இப்படிப்பட்டவர்கள் தலைவனின் புத்தியை கெடுத்து விடுவார்கள். அதனால் பந்தபாசம் இல்லாதவனாகத் தேர்ந்தெடுத்து உன் கூட வைத்துக் கொள். தயார் செய்து தருகிறேன். காடுகளுக்கு அனுப்பு, பொதிகை மலைக்கு அனுப்பு. தயாரிப்போம்.

“எண்ணிக்கையில் சில நூறு பேரையாவது தயாரித்த பின்பு எதையாவது செய்யலாம். அது இல்லாமல் புரட்சியைப் பற்றி யோசிக்கிறாய். தமிழனை காப்பாற்றுவது என்பது அவ்வளவு எளிது அல்ல. தமிழன் பந்தயம் போடு, 8 நாளில் கெட்டுப் போகின்றேன் எனக் கூறுபவன். தமிழன் அடுத்தவனைத்தான் பெரியவனாக நினைக்கிறான். கூலியாக, எடுபிடியாக, செருப்பு தூக்குபவனாக இருக்கிறான். கங்காணியாக, கார்வாரியாக இருக்கிறான். தன்னுடைய இனத்தினை மதிக்க மாட்டான். அடுத்தவனைத்தான் மதிப்பான். அப்படிப்பட்ட தமிழனை எப்படித் திருத்தப் போகின்றாய்?

“அதுக்கு இலக்கியம், நாடகம், பட்டிமன்றம், பாணர்கள், .........., கூத்து விறலியர்கள், பறையர், துடியர், கடம்பர் இவர்களை வைத்து நீ எதையாவது செய்ய வேண்டும். அப்படிப் பார்த்தால் நாட்டிலுள்ள வழிபாட்டு நிலையங்கள், கருவறைகள் இவைகள் உன் கையில் வர வேண்டும். அதற்கு முன்பாக நாட்டில் உள்ள பூசாறிகள் ஒன்று சேர வேண்டும். அது உன்னால் முடியக் கூடியதா? .......... ......... *[நகலில் வரிகள் பக்கத்தின் இறுதியிலும், மறு பக்கத்தின் ஆரம்பத்திலும் தெரியவில்லை]* ........... ............ ................ ................ ..................

“எதை எடுத்தாலும் நான் நோயாளி, முடியாது என்றால் என்ன செய்வது? இன்னும் உனக்கு ஆள் கிடைக்கவில்லை என்றால், வலை வீசினால் கிடைக்கவில்லை என்றால் என்ன பொருள்? பெரிய மீன் இல்லை என்றுதான் பொருள். அது போன்று தமிழ்நாட்டில் ஆட்கள் இன்னும் தயாராகவில்லை என்று பொருளாகின்றது. நீயாக தயாராகி விட்டதாக நினைத்து வலை வீசினேன் கிடைக்கவில்லை என்றால் என்ன செய்வது? ஏரியில் பெரிய மீன் இருந்தால் பெரிய வலை போட்டால் கிடைக்கும். அயிரை மீன் வலை வீசினால் கெண்டை, கெழுத்தியாவது கிடைக்கும். நீ விரால் மீனுக்கு வீசுகிறாய். சின்னச் சின்ன குரவைக் குட்டியாக இருக்கிறது. பெரிய விரால் இல்லை.

“நாட்டில் இருப்பவன் முழுமையாகத் தயாராகவில்லை. நீ பேசுவது, செய்வது, கருத்துக்களைச் சொல்வது இதிலேயிருந்து உன்னிடம் அடியாளுக வருவதற்கு இன்று நாட்டில் ஆள் இல்லை. அதைப் புரிய முடியாத சின்னச் சின்ன குட்டிப் பசங்களாக இருக்கிறார்கள். இதை எல்லாம் யோசித்து, அதற்கு ஏற்றவாறு சின்னப் பிள்ளைகளுக்கு விளையாட்டுக் காட்டியது போல் அவர்களைத் தயார் செய்திட உன்னாலான முயற்சிகளைச் செய். உன்னுடைய தலைமைப் பீடத்திலே சரியாக பகலிலோ, அல்லது இரவிலோ ஒரு வேளையாவது பூசைமொழி கூறி பூசை நடந்ததாகத் தெரியவில்லை.” என்று கூறினார்.

**குருதேவர்**: “எனக்கு ஆள் கிடைக்கிறார்கள். அப்படி இருந்தும் வீட்டில் வேலை நிறைய இருக்கிறது. சொல்லித்தான் பார்க்கிறேன். பூசைகளைச் செய்ய முடியாத அளவுக்கு வேலை வந்து விடுகிறது. எதிர்பாராமல் வேற பிறச்சினைகள் இருக்கின்றது. வீட்டு வேலைக்கு ஆள் கிடைக்க வில்லை.”

**கபாடபுரத்துக் கருவூரார்**: “அப்படி என்றால் பொறுமையாக இரு.”

அதற்கப்புறம் வடஆற்காடு திருகுலத்தைப் பற்றிக் கூறி DMஐக் காப்பாற்றக் கூறினேன். கபாடபுரத்துக் கருவூரார், “ஆகட்டும் போகிறேன், போய்ப் பார்க்கிறேன்” என்றார். “திருகுலத்தையும் பார்க்கிறேன். ஏதாவது செய்ய வேண்டுமென்றால் இனிமேல் அடிக்கடி வருகிறேன். இரவு அல்லது பகலில்; பகலில்தான் அதிகம் வர முடியும். அந்த உச்சிவேளை உருமவேளைப் பொழுதில் காயந்திரி கூறினால் நல்லது. இரவில் முடியவில்லை என்கிறாய்; அதனால் பகலில் சொல்லச் சொல்லு. அல்லது இரவு சொல்லு. பயிற்சியைச் செய். உனக்கு வேண்டுமென்றால் குண்டலினியை எழுப்பு. ஓகாசனம் செய்து பார்.”

**குருதேவர்**: "சரி இதுதான் என்றால், தாத்தாவைக் கேட்கிறேன். பத்தாயிரம் பதிலிகளை அனுப்பி இருக்கிறார். நான் அவர்களைக் கேட்கவா?"

**கபாடபுரத்துக் கருவூரார்**: "...வேண்டாம். அதெல்லாம் கேட்காதே! 1½ இலட்சம் பேர் எங்கே? 10000 பேர் எங்கே? அவர்களை உனக்குப் பாதுகாப்பிற்காக அனுப்பி இருக்கிறார்கள். அவர்களை ஏதும் கேள்வி கேட்டு கெடுத்துக் கொள்ளாதே. நீ பேசாமல் இரு" என்றார்.

**குருதேவர்**: "சரி, நான் எழுதிக் கொண்டு இருக்கிறேனே இதில் ஏதும் ஆபத்து வருமா?" என்றேன்.

**கபாடபுரத்துக் கருவூரார்**: "நீ ஆபத்தைப் பற்றி யோசிக்காமல் எழுது. ஆட்கள் வருவார்கள். சொல்வதைச் செய். இப்போது நீ ஒன்றும் சிரமப்படவில்லை. நேரத்திற்கு சாப்பாடு கிடைக்கிறது. பார்த்துக் கொள்ள ஆள் இருக்கிறார்கள். பெண்டாட்டி பிள்ளை எல்லாம் இருக்கிறது! கவலைப்படாமல் இதேபோல் ஆமை வேகத்தில் போய்க் கொண்டு இரு. எல்லாம் நடக்கும். நான் போகிறேன் அவசரமாக" என்றார்.

சரி, அவர் நேபாளம் வரை போகிறார் என்பதால் "இலங்கை சென்று அங்கே இருக்கும் நம்மூர்ப் பிறச்சினையையும் கவனியுங்கள்" என்று கூறினேன்.

**கபாடபுரத்துக் கருவூரார்**: "அதில் நான் தலையிடுவதற்கு ஒன்றும் இல்லை; நான் நிலவறைக்குச் சென்று விட்டு அக்ரபோடாவைப் பார்த்து விட்டு இரண்டு மூன்று நாட்களில் வருகின்றேன்" என்றார்.

**குருதேவர்**: "அதற்குள் நான் கால் சரியாகி நடக்க வேண்டும். காரணை கருகுலம் வருகின்றேன். நீங்கள் அங்கு வந்து சேரவேண்டும். அங்கே ஏதாவது அடிப்படையான வேலை செய்தாக

வேண்டும். சக்கரங்கள் எல்லாம் வைக்க வேண்டும். இந்த ஆடி மாதத்திலாவது விழாச் செய்ய வேண்டும்.

**கபாடபுரத்துக் கருவூரர்:** "அவசரப் படாதே! எல்லாம் செய்வோம்" என்று பேசிக் கொண்டு இருக்கும் போதே போய்ச் சேர்ந்தார்.

**குறிப்பு:- இந்தக் கட்டுரை குருதேவர் அவர்கள் தமது தலைமைப் பீடத்தில் இருக்கும் போது கபாடபுரத்துக் கருவூரர் அவர்கள் வந்ததைப் பற்றி விரிவாக ஒரு ஒலி நாடாக் கருவியில் பேசிப் பதிவு செய்ததை சித்தரடியான் திரு முத்துராசமூர்த்தி அவர்கள் கேட்டு தாளில் எழுதி வைத்ததின் நகல். இந்த நகல் தெளிவாக இன்மையால் சில வரிகள் தெரியவில்லை. ஒலிநாடாவைக் கேட்டு வேகமாக எழுதியதால் எழுத்துக்களும் படிப்பதற்கேற்ற வகையில் இல்லை.**

**//உண்மை நகல்//**
**//மூலம்: சித்தரடியான் திரு. முத்துராசமூர்த்தி அவர்களின் கையெழுத்தில் இருந்த நகல்.//**

# உகஅற நாயகியின் பரிந்துரைகள்

தலைமைப்பீடம்,
26-3-88.

க.ஈ.ச. DRR No. 2573/88.

அருள்மிகு சமயக்குரவர் நால்வர் சன்னிதானம் சித்தரடியான் திரு த.கேசவன் அவர்களுக்கு (5, பழைய மாகாளிப்பட்டி ரோடு, மதுரை-625001) ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்களின் தலைமைப்பீடம் விடுக்கும் மடல்.

(1) விண்வெளியிலிருந்து வந்துள்ள உகஅற நாயகியின் ஆணைப்படி தாங்கள் இக்கடிதம் கண்டது முதல் தென்மண்டல இ.ம.இ. செயலாளர் என்ற பதவியிலிருந்து நீக்கப்பட்டு மதுரை மாவட்ட அ.வி.தி. தலைவர் என்று அறிவிக்கப்படுகிறீர்கள். இந்த அறிவிப்பினை ஏற்றுத் தாங்கள் செய்யும் பூசைகளில் அறிவித்துக் கொள்ளுங்கள். நமது அடியான், அடியாள், அடியார்கள் அனைவரிடமும் இவ்வறிவிப்பினைத் தெரிவித்துச் செயல்படுங்கள்.

(2) எதிர்பாராத விதமாகப் பிறமயோகி திரு M.S.R.மாரியப்பன் அவர்கள் ஒரு சில பாதிப்புக்களுக்கு உள்ளாகி யிருப்பதால் பழம்பிறப்புக்களை உணர்ந்துள்ள சமயக்குரவர் நால்வர் சன்னிதானமாகிய தாங்கள் குருதேவரின் மறு ஆணை வரும்வரை பிறமயோகி M.S.R.மாரியப்பன் அவர்களைச் சந்திக்க வேண்டாம். எது வேண்டுமானாலும் தாங்கள் தென்மண்டல அ.வி.தி. தலைவர் திரு ச.துரைராசன் அவர்களையும், தென்மண்டலப் பெரியவர் திரு சு.இராசு

நயினு அவர்களேயும் அன்ருடம் ஒருமுறையாவது சந்தித்து விவரமறியவும்.

(3) குருதேவர் மதுரை வருவதென்பது ஏறத்தாழ முக்கால் பங்குக்கு மேல் அ.வி.தி.யின் மூலம்தான் என்பதாலும், உயர்திரு M.S.R.மாரியப்பன் அவர்களுக்குக் குறிப்பிட்ட காலம் ஓய்வு தர வேண்டும் என நினேப்பதாலும், அவர் தமிழகம் முழுதும் உள்ள கோயில்களுக்குச் சுற்றுப்பயணம் செய்ய வேண்டும் என்பதாலும், மதுரையைப் பொறுத்தவரை இயக்கத்தின் அனேத்து வரவு செலவுகளேயும் (1) தென்மண்டல அ.வி.தி. தலேவர் ச.துரைராசன், (2) மதுரை மாவட்ட அ.வி.தி. தலேவர் த.கேசவன், (3) தென்மண்டலப் பெரியவர் சு.இராசு நயினு, (4) தென்மண்டல அ.வி.தி. செயலாளர் வெ.செகதீசன், (5) பாதுகாப்பு அமைச்சர் திரு துரைப்பிள்ளே ஆகிய ஐவர் சேர்ந்த ஐம்பெருங்குழு கவனித்துக் கொள்ளட்டும். இந்த ஐம்பெருங்குழுவே அடிக்கடி கூடி விவாதித்துப் பொறுப்பாக வசூல் முதல் செலவு வரை கணக்கு வைத்துச் செலவு செய்யட்டும். அருளாட்சி அமைப்புப் பணிக்கான தேவதேவியின் பரிந்துரைப்படி விடுக்கப்படும் **குருவாணே** இது.

<u>**குறிப்பு**</u>:- அருள்மிகு பிறமயோகி திரு M.S.R.மாரியப்பன் அவர்கள் தமது முழுநேரத்தில் தொழிலுக்குப் பாதி நேரமும், இயக்கத்திற்காகப் பாதி நேரமும் செலவழிக்கட்டும். <u>அவர் மதுரைக்குள் மட்டும் செயல்பட வேண்டாம்</u>.

(4) அருட்போரை முன்னிட்டு உகஅற நாயகி பரிந்துரைகளே வழங்குவதின் பேரில் குருதேவர் மதுரைக்கு வரும்போது அருளுலகப் பாதிப்பிற்கும், குருதேவரின் கண்டிப்பிற்கும் உள்ளாகியிருக்கும் வெ.செகதீசன், ந.தயாளன், M.C.இராமன், நெ.சேவுகன், பொன்னமராவதி வலேயபட்டி பழனியப்பன், பிறமயோகி M.S.R.மாரியப்பன் முதலியோர் இல்லங்களிலிருந்து எந்த வகையான உணவு ஏற்பாடும் செய்யப்பட

வேண்டாம். அதாவது குருதேவருக்கு எந்தவித உணவும் தயாரித்து அனுப்பிட வேண்டாம் என்பது தெரிவித்துக் கொள்ளப் படுகிறது. இவர்கள் அனைவரும் முழுநலம் பெற்ற பின் தான் இவர்கள் குருதேவருக்கு உணவுப் பொருள் எதுவும் தரலாம். இதைத் தவறுதலாக எடுத்துக் கொள்ள வேண்டாம். இதேபோல், இவர்கள் குருதேவரைத் தங்களது இல்லங்களுக்கு அழைக்க வேண்டாம்.

(5) இவ்வஞ்சலை எல்லோருக்கும் படித்துக் காட்டவும். தாங்கள் புதிதாக மதுரை மாவட்ட அ.வி.தி. தலைவர் என்று பொறுப்பேற்றிருப்பதை எல்லோருக்கும் தெரிவித்திடுங்கள். மதுரை மாவட்டத்தில் தாங்கள் அனைத்து அ.வி.தி. நிகழ்ச்சிகளிலும் நேரடியாகப் பங்கேற்று அ.வி.தி. வளர்ச்சி பெற உழையுங்கள். தங்களின் செயல்பாடுகளுக்கு மதுரை அடியான்கள், அடியாள்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்கிட இதுவே **குருவாணை**. இவ்வஞ்சலைக் காட்டி அனைவரின் உதவியையும் பெறுக. மதுரை மாவட்டத்தில் நிகழும் அ.வி.தி. நிகழ்ச்சிகள் பற்றி வாரம் ஒருமுறை விரிவான அஞ்சல் எழுதித் தலைமைப் பீடத்திற்குத் தெரிவியுங்கள். சித்தரடியான் O.L.இரவீந்திரநாத் மூலம் ஒருநாள் விட்டு ஒருநாள் செய்திகளை தலைமைப்பீடத்திற்குத் தொலைபேசி வழியாக வழங்கிடுங்கள். எல்லோரிடமும் நேரடித் தொடர்பு வைத்துக் கொள்ளுங்கள்.

(6) **“திருப்பரங்குன்ற அருள்மிகு தேவசேனாதிபதி பதினெட்டுப் படைவீடுடையோன் கலியுக அருட்போர்த் தளபதி முருகப் பெருமான் அருட்கோட்டம்”, “திருப்பரங்குன்றச் சுடலை வேள்விச் சாலை” - இங்கு வாரம் தோறும் பதினெண்சித்தர்கள் முறையில் வேள்வித் தீ ஓம்பப்படுகிறது. அனைத்து விதமான பாதிப்புகளுக்கும் உரிய பரிகாரம் பதினெண்சித்தர்கள் முறையில் வேள்வித் தீயில் செய்து தரப்படுகிறது. வேள்விக்குரிய பொருட்கள், அவிர்ப்பலிகள், படையல்கள், காணிக்கைகள் வழங்குவோர் வரலாம். அனைத்து**

வகைப்பட்ட நோயாளிகளுக்கும், பேயாளிகளுக்கும் நலமளித்திடவே இந்த உலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டு வேள்வி நிகழ்த்தப் படுகிறது. அருளை அநுபவப் பொருளாக வழங்க வல்ல பதினெண்சித்தர்களின் சித்தர் நெறியான சீவநெறி எனும் மெய்யான இந்துமதம் தன்னுடைய அருட்பணிகளை விழிச்சியோடும், எழிச்சியோடும், சாதி மத மொழி இன நாட்டு வேறுபாடின்றி அனைத்து மக்களுக்கும் வழங்குகிறது. ஊழ்வினை, விதி, வினை, ஆள்வினை, சூழ்வினை, மந்திறவாதிகளுடைய பாதிப்புக்கள், குலதெய்வப் பாதிப்புக்கள், ... முதலிய எல்லா வகையான பாதிப்புக்களுக்கும் அருளூறு கருவாசகங்கள், குருவாசகங்கள், தருவாசகங்கள், திருவாசகங்கள் மூலம் சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள் உங்களுக்காக நலமளிக்கப் பூசைகளைச் செய்கிறார்கள். புரிந்தும் புரியவைத்தும் செயல்படுங்கள்.

"வாருங்கள் உங்கள் குறைகள் அனைத்தையும் போக்குகிறோம்."
"வாருங்கள் தெய்வீகத் தமிழால் நீங்கள் கடவுளாகிட வழிகாட்டுகிறோம்."
"வாருங்கள் குண்டலினி சத்தியை எழுப்பிக் கொள்ளுங்கள்."
"வாருங்கள் ஓம சத்தி, ஓக சத்தி, யாக சத்தி, யக்ஞ சத்தி, வேள்வி சத்தி எனும் ஐவகைச் சத்திகளுள் உங்களுக்குரிய சத்தி எது என்று தெரிந்து புரிந்து ஓம்பக் கற்றுக் கொள்ளுங்கள்."

அருளாணையும், குருவாணையும் பெற்று விடுக்கப்படும் அறிவிப்பு இது.

தென்மண்டல அ.வி.தி. தலைவர்,
மதுரை மாவட்ட அ.வி.தி. தலைவர்,
தென்மண்டலப் பெரியவர்.

கி.மு. 43,71,101ஆவது ஆண்டில் கடலுள் மறைந்த இளமுறியாக் கண்டத்தில் பஃறுளியாற்றின் கரையில் இருந்த தென்மதுரையில்

பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும், 48 வகைச் சித்தர்களும், 48 வகை வழிபடுநிலேயினர்களும், வானவர்களும், ஆகாயத்தவர்களும், விண்ணவர்களும், விசும்பினர்களும், ககனத்தவர்களும், பரவெளியினர்களும், பாழ்வெளியினர்களும், .... முதலியவர்களும் இருந்து; முதல் அருட்பேரரசை உருவாக்கி இந்துமதத்தை வடிவமைப்புக்களோடும், வாழ்வியல் அமைப்புக்களோடும், நிறுவன நிருவாகச் சட்டதிட்டக் கட்டுப்பாட்டு அமைப்புக்களோடும் எப்படி அறிவித்தார்களோ அப்படியே மீண்டும் இந்துமதத்தை மக்களுக்கு வழங்கிட நான்குயுக நாயகம், அருளாட்சி நாயகம், தத்துவ நாயகம், இந்துமதத் தந்தை, குவலய குருபீடம், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், கருவறை மூலவர்களின் அம்மையப்பர், நிறையக்ஞர், குருமகா சன்னிதானம், "ஞானச்சாரியார்", ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் நாளோலக்கத்திலும், திருவோலக்கத்திலும் அமர்ந்து அருட்பணி விரிவாக்கத் திட்டத்தைச் செயலாக்குகிறார்.

இதன்படி திருப்பரங்குன்றம் சுடலேயின் அருட்கோட்டக் காப்பாளாராக அருள்மிகு திருப்பரங்குன்றம் சுடலேச் சன்னிதானம் ஆசுடின்பட்டி மாரியம்மன் சன்னிதானம் சித்தரடியார் A.வேலுத் தேவர் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர் மூலம் அவ்வட்டார மக்கள் அருள் பெற்று உய்யுமாறு அறிவிக்கப்படுகிறார்கள்.

இதேபோல் ஆலவாய் மாமூதூர் மதுரையில் வியாழக் கிழமையில் தத்தனேரி சுடலேயிலும், செவ்வாய்க் கிழமையில் மூலக்கரைச் சுடலேயிலும், புதன் ஞாயிற்றுக் கிழமைகளில் தெற்கு வெளிவீதி காளி கோயிலிலும், வெள்ளிக் கிழமையில் மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்திலும் நிகழுகின்ற ஓம, ஓக, யாக, யக்ஞ, வேள்விப் பூசைகளில் கலந்து அருள் பெற்று உய்யுமாறு மக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

**இந்து மறுமலர்ச்சி இயக்கத்தவர்கள் குருதி வண்ணச் செவ்வாடையில் மெய்ஞ்ஞானக் கொடி, மயில்பீலி, திரிசூலம் ஏந்தி வருவார்கள். எல்லா வகையான பாதிப்புக்களுக்கும் பரிகாரம் வழங்கி அருள் வழங்குவார்கள். நலமடைவீர்களாகுக.**

**<u>குறிப்பு</u>:-**

**(1) இம்மண்ணுலகின் முதல் மதமும், உலக மதங்களின் மூல மதமுமான இந்துமதத்தின் தத்துவ சித்தாந்த வரலாற்று நூல்களை வாங்கிப் படித்துப் பயனடைவீர்களாகுக.**

**(2) விரைவில் மதுரையில் நடக்க இருக்கின்ற உருத்திர வேள்விக்கும், சண்டி ஓமத்திற்கும் உங்களை உரியவர்களாக்கிக் கொள்ளுங்கள்.**

**தொடர்பு:-**

**தென்மண்டல அ.வி.தி. தலைவர் ச.துரைராசன் B.Sc., 115, புட்டுத் தோப்பு ரோடு, மதுரை-625010.**

**பதினெண்சித்தர் மடம், பதினெண்சித்தர் பீடம்.**

(7) ஆறும் பத்தியில் காட்டப்பட்டுள்ள அறிவிப்பு நோட்டீசை அப்படியே அச்சிட்டு அதில் தொடர்பு முகவரிகளாகக் கீழே குறிப்பிட்டுள்ளவற்றையும் சேர்த்துக் கொள்ளவும்.

(i) தென்மண்டல இ.ம.இ. தலைவர், பிறமயோகி M.S.R. மாரியப்பன், 49-A, டவுன்ஹால் ரோடு, மதுரை-1.

(ii) தென்மண்டல பெரியவர் சு.இராசுநாயுடு, 130-A, மேலமாசி வீதி, மதுரை-1.

(iii) அருளாட்சிப் பாதுகாப்பு அமைச்சர் திரு. துரைப்பிள்ளை, துரைராசு ஆட்டோமொபைல்சு, 15-A, அண்ணு தோப்பு, இராசா மில் ரோடு, மதுரை-10.

(iv) தென்மண்டல அ.வி.தி. தலைவர் ச.துரைராசன், 115, புட்டுத் தோப்பு ரோடு, மதுரை - 10.

(v) மதுரை மாவட்ட அ.வி.தி. தலைவர் த.கேசவன், 5, பழைய மாகாளிப்பட்டி ரோடு, மதுரை - 1.

(vi) மாநில மகளிர் அணிச் செயலாளர் திரு. N.S.சாமிநாதன், 9A, வேலாயுதம் பிள்ளை 2வது சந்து, புதுமாகாளிப்பட்டி ரோடு, மதுரை - 1.

(vii) தென்மண்டல அ.வி.தி. செயலாளர் வெ.செகதீசன், C/O. தேவி விசாலம் காபி பார், 51B, புட்டுத் தோப்பு ரோடு, மதுரை - 10. (C/O முகவரி செகதீசன் விருப்பப்படி மாற்றலாம். - குருவாணை.)

(viii) தென்மண்டல அ.வி.தி. கொள்கை பரப்புச் செயலாளர் திரு. O.L.இரவீந்திரநாத். {இவரது பூசையறை முகவரி போடவும்}.

(ix) இ.ம.இ./அ.வி.தி. கொள்கை பரப்புச் செயலாளர் திரு. பெரி.முத்தையா, 29, திருவள்ளுவர் தெரு, பெத்தானியாபுரம், மதுரை - 625016.

**குருவாணை!**

**நான்குயுக நாயகம், குருமகா சன்னிதானம்,**
**ஞானாச்சாரியார், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்,**
**27-3-1988.**

**நகல் நல்குபவர்:-**

அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம் சித்தரடியார் சீ.மணி.

**//உண்மை நகல்//**
**//மூலம்: சித்தரடியான் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்த நகல்.//**

# அ.வி.தி. சுற்றுப்பயண நடைமுறைகள்

8-4-1988.

அருள்மிகு வேம்பை சுடலைக்காரி சன்னிதானமும், மேற்கு மண்டல இ.ம.இ. செயலாளரும் ஆகிய இரா.வெங்கடேசன் அவர்களுக்கு;

ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர் அவர்களின் தலைமைப்பீடம் விடுக்கும் அஞ்சல்:

1) தாங்கள் குறிப்பிட்டது போல் அருள்மிகு மாங்காடு காமாட்சியம்மன் சன்னிதானம் பா.மோகன் அவர்களின் சுற்றுப்பயணம் வெற்றிப் பயணமே.

2) நமது அ.வி.தி. செயல்வீரர்கள் எப்படிச் செயல்பட வேண்டும் என்று தனிப்பட்ட பயிற்சிகள் இதுவரை குருதேவரால் தர இயலவில்லை. பொருளாதாரம் சரியில்லாததுதான் காரணம். எனவே, தாங்கள் குறிப்பிட்டுள்ள குறை உண்மைதான். விரைவில் சரியாக்க முயலுகிறோம்.

3) சித்தரடியார் பா.மோகன் அவர்களின் சுற்றுப்பயணத்தின் போது குறிப்பிடத் தக்க அளவு அருளுலக அநுபவம் கிட்டவில்லை. இது அவருடைய குற்றமில்லை. தாங்கள் முன்கூட்டியே குருதேவரிடம் நாட்கள் குறித்து கால அவகாசம் தந்து தெரிவித்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் குருதேவர் அவரை முன்கூட்டியே தயாரித்து அனுப்பியிருப்பார்.

4) யார் யார் அ.வி.தி. சுற்றுப்பயணத்தை முன்னின்று நிகழ்த்துகிறார்களோ, அவர்களிடம் துணிச்சலாக, எந்தெந்த நபர்களோடு

எப்படியெப்படிப் பேச வேண்டும் என்பதை முழுமையாகக் கற்றுத் தர வேண்டும்.

5) அருட்கணிப்பில் வரும் தவறுகளைத் திருத்த வேண்டுமென்றால், உடனுக்குடன் நேரில் கூறக்கூடாது. பாதிப்பாளர்களை அமர வைத்து அருட்கணிப்பாளர்களே 1+2=3 என்று அருட்கணிப்பை எழுதி சுற்றுப்பயணப் பொறுப்பாளரிடம் தர வேண்டும். அதைக் குருதேவரிடம் அனுப்பி விளக்கம் கேட்டுக் கூறுவதாகப் பாதிப்பாளர்களிடம் கூறி ஆபத்து இல்லாத கருத்துக்களை மட்டும் உடனுக்குடன் கூறிடலாம். இம்முறை ஏற்கனவே கூறப்பட்ட ஒன்று. இதுவரை கடைப்பிடிக்காமல் போனது அந்தந்த வட்டாரத்தார்களின் தவறு.

6) யாராக இருந்தாலும் அருட்கணிப்புக் கூறும்போது வாய் தவறி (by the slip of the tongue) ஏதேனும் கூற நேரிட்டிடும். அதனால்தான், அருட்கணிப்பை முதலில் எழுதிப் பின் படித்துப் பார்த்து விட்டு அதன் பின்னரே கூற வேண்டும் என்ற முறையை எல்லோரும் எல்லா இடங்களிலும் கையாள வேண்டும்.

7) சித்தரடியார் பா.மோகன் தங்களோடு வந்தும் கூட தங்களின் Scooter பழுதடைந்ததும், தங்கள் உடலில் காயம் பட்டதும் தோல்வி அல்ல. மிகப்பெரிய ஆபத்து இது மாதிரியான சிறிய ஆபத்துக்களோடு தவிர்க்கப்பட்டன என்பதுதான் பொருள்.

8) தங்களுக்கு ஏன் அடிபட்டது? வண்டி பழுதுற்றது ஏன்? என்பனவற்றை சித்தரடியார் மோகனால் தங்கள் அருகில் இருந்தவரை கணிக்க இயலவில்லை. கணிக்கவும் இயலாது என்பதுதான் உண்மை. எனவே, இயற்கையாகவே தாங்கள் அவரை விட்டுச் சென்றபின் அவர் தங்களுடைய பாதிப்புக்களை உணர்ந்து அனைவரிடமும் கூறி உள்ளார். இதில் தவறோ, தங்கள் மீது வருத்தமோ, தங்களிடமிருந்து மறைக்க வேண்டிய சதியோ இல்லை. அவர் ஓர் அப்பாவி.

அவரிடம் நிறைய அருளாற்றல் உண்டு. ஆனால், பிறரிடம் பழகுமுறை தெரியாது.

**குறிப்பு:-** குருதேவரே பல ஆயிரம் ரூபாய்கள் கடனாகச் செலவழித்து அவரைப் பாதுகாக்கின்றார் என்ற பேருண்மையைத் தாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால், நமது இயக்கத்தில் பல ஆண்டுகள் குருதேவரிடம் தயாரானவர்களைக் கூட கண்டித்தும், தண்டித்தும், ஒதுக்கியும், விலக்கியும் அருளுலகம் செயல்பட்டு வரும் நேரமிது. சித்தரடியார் மோகனை நாம்தான் பாதுகாக்க வேண்டும், பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அருளுலகில் மிகப்பெரிய செல்வர் அவர். ஆனால், பொருளுலகில் வறியவர். அப்பாவியும், ஏமாளியும் கூட. எனவே, நீங்கள் மோகனை எப்போது வேண்டுமானாலும் வரவழைத்துப் பயன்படுத்திட வேண்டும்.

9) சுற்றுப்பயணத்தில் கடைசி வரை இருந்து வழியனுப்ப இயலாமைக்கு வருந்த வேண்டியதில்லை. ஆனால், மாட்டுவேலம்பட்டி சென்றும் அனாதிகாலப் பீடாதிபதியின் கருவறை சென்று வராதது ஏன்? அது ஒரு சிறு தோல்விதான். தாங்கள் மடத்து முனீசுவரர் என்று குறிப்பிட்டிருப்பது யார்? எங்கே உள்ளது இந்தக் கோயில்? குருதேவர் பார்த்திருக்கிறாரா? அடுத்தமுறை சித்தரடியார் பா.மோகன் வரும்போது அனாதி காலப் பீடாதிபதி இருப்பிடம் அழைத்துச் செல்க. ஏனெனில், மோகனுக்கு இவரிடம் நல்ல செல்வாக்கு உண்டு. எனவே, அனாதிகாலப் பீடாதிபதியின் அருளைத் தங்களுக்கு மோகன் பெற்றுத் தருவார். தாங்களும் இதற்கேற்ப மோகனுக்குத் தங்களால் இயன்ற அளவு பொருளுதவியும், நிதியுதவியும் தருக. பலரிடமும் காணிக்கை அரிசி சேகரித்து அரிசியாகவே வழங்குக.

**குறிப்பு:-** குருதேவரால் மோகனைப் பாதுகாக்க இயலவில்லை. ஏனெனில், குருதேவரிடம் இருந்த சிறிதளவு நிதியும் பயிற்சி முகாம் நடத்தியதில் தீர்ந்து போய்விட்டது. எனவே, தங்களைப்

போன்றோரிடம் மோகனைப் பாதுகாக்கக் கோருகிறார் குருதேவர். அவர் மூலம் மந்திரித்த கயிறு, தாயத்து முதலியன பெறலாம். அவரைக் கொண்டு மேற்கு மண்டலம் முழுமைக்கும் சுற்றுப்பயணம் செய்யலாம். சிறுமுகைக்கும் அவசியம் அவரை அழைத்துச் செல்க.

**<u>சிறப்புக் குறிப்பு:-</u> தாங்கள் நல்ல அருளுலகப் பாதுகாப்புக்களைப் பெற காவல்துறையின் ஆய்வாளர்கள் போல் (Sub-Inspectors) காக்கி உடை தரித்துச் சுற்றுப்பயணங்களை மேற்கொள்ளுக. காக்கி நிறத்திலேயே தொப்பி ஒன்றும் தயாரித்து வைத்துக் கொள்க. குருதேவரைக் காண வருகையில் இந்த உடையுடன்தான் வரவேண்டும். காக்கி உடை என்பது சாண வண்ணம் என்று கூறப்படுவது. சங்கிலிக் கருப்பு என்ற வழிபடு நிலை பெற்றவர்கள் அணியும் உடை சாண வண்ணத்தில்தான் இருக்கும். இதேபோல், காவல் தெய்வங்களும், படைத் தலைவர்களும் அணியும் உடை பச்சை வண்ணத்தில் இருக்கும்.**

**இன்றைக்கு நாம் காணும் பேண்ட், சட்டை என்பதெல்லாம் மேலை நாட்டார்கள் கண்டுபிடித்ததல்ல. ஊசி என்பது தமிழ்ச் சங்க இலக்கியங்களில் உள்ளது. வண்ண வண்ண உடைகளை விதம் விதமாகத் தைத்து அணிந்தவர்கள் தமிழர்கள். சல்லடம் என்பது பேண்ட் போன்ற உடை. அதில் அரைச் சல்லடம், முழுச் சல்லடம் என்பவையும் இருந்தன. கிம்பாயம், மெய்ப்பை என்ற சொற்கள் சட்டையைக் குறிக்கும். எனவே, சாண வண்ணத்தில் தாங்கள் அணியப் போகும் முழுக்கால் சட்டையும், மேல்சட்டையும் அருளுலகிற்குத் தொடர்பில்லாதவை என்று எண்ணி விடாதீர்கள். இத்துடன் இடுப்பில் கச்சை போல் பெல்ட்டும் அணியுங்கள். தாங்கள் இந்த உடை அணிவது போல் உடையணியச் சிலரைத் தயாரித்திடுங்கள். அது அவர்களையும் பாதுகாக்கும். நம்மையும் பாதுகாக்கும்.**

10) அருட்கணிப்பிற்கு என்று யாரை அழைத்தாலும், 2 பேராக அழைக்கவும். கணிப்பிற்கான யாகத்திற்கு 4 சன்னிதானங்களாவது உடனிருந்திட ஏற்பாடு செய்யுங்கள். அருட்கணிப்பு கணிக்க வரும் அ.வி.தி. செயல்வீரர்கள் பலிகள் கொடுத்துப் பூசைகளை நிறைவேற்றிப் பரிகாரப் பொருட்களுடன் வருவதற்காகத் தனியாக ரூ.300/- பணம் அனுப்பியேயாக வேண்டும். 2 பேருக்கான போக்குவரத்துச் செலவு ரூ.200/- தனி. இவ்வளவு முடியாதவர்கள் என்றால் கணிப்பிற்கு வரவழைக்காதீர்கள். வேண்டுமானால், 2 அல்லது 3 குடும்பங்கள் இணைந்து இந்தப் பணத்தைப் பங்கிட்டுக் கொண்டு வரவழைக்க முயலலாம். ஆனால், செலவு செய்யாமல் பூசைகள் செய்யவும் அருட்கணிப்பு கணிக்கவும் முயலாதீர்கள். யாகத்திற்கு வருபவர்கள் மிகப் பெரிய சன்னிதான நிலையில் கடவுளுக்குச் சமமாக இருப்பவர்கள். எனவே, ஒரு சோடி சிவப்பு வேட்டி, அவர் மனைவிக்குக் கைத்தறி சேலை என்று கட்டாயம் காணிக்கை தர வேண்டும்.

11) அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம் சீ.மணி பற்றி எந்தக் குறிப்புமே ஏன் இல்லை? சீ.மணியை எக்காரணம் பற்றியும் மறந்தோ துறந்தோ எதையும் செய்யக் கூடாது. ஒற்றுமையின்றிச் செயல்பட்டு விடக் கூடாது. உடல் ஊனம் உள்ளவர் என்பதால் எந்தப் பாதிப்பும் பூசையின் போது வராமல் காப்பாற்றும் ஆற்றல் உள்ளவர் இவர். இவரைக் கொண்டு பூசைமொழி வாசகங்களைக் கூறச் சொல்ல வேண்டும். தருகுலத்தில் நிகழும் எந்தப் பூசையும் இவர் இல்லாமல் நிகழக் கூடாது. தாங்கள் மேற்கு மண்டலத்திற்கே இ.ம.இ. செயலாளர். இதுபோன்ற தவறு நிகழக் கூடாது. எல்லோரையும் அரவணைத்துக் கொண்டு செல்ல வேண்டும்.

12) தாங்கள் என்ன அருட்கணிப்பு செய்தீர்கள்? பரிகாரங்கள் எந்த முறையில் கூறப்பட்டன? என்ற விவரங்களைக் குருதேவருக்குத் தெரியப்படுத்த வில்லை. இருப்பினும் நிகழ்ந்தவை பற்றி ஓரளவு

விரிவாக எழுதிய விதம் பாராட்டப்படுகிறது. இதுபோல்தான் எழுத வேண்டும். தங்களுக்கு என்றும் குருதேவரின் அருளும் ஆசியும் உண்டு.

13) பெங்களூரில் இருக்கும் சித்தரடியான் வெங்கட்டரமணன் குருதேவர் அறிக்கைக்கும், கருகுலப் பராமரிப்பிற்கும் பணம் அனுப்புவதாகக் கூறிச் சென்றுர். ஆனுல், இதுவரை பணம் அனுப்பவே இல்லை. ஏன் என்ற விவரம் கேட்டு அவருக்குக் கடிதம் எழுதவும். ஊருக்கு வந்தாலும் நேரில் விவரம் கேட்டறிந்து குருதேவருக்குத் தெரியப்படுத்துக.

**அஞ்சல் நாயகம்,**
**இளந்துறவி சுந்தரானந்தா,**
**8-4-1988.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் சுந்தரானந்தாவின் கையெழுத்தில் இருந்தது.//**

# இந்துவேதம்

28-7-1994.

# இருக்கு வேதம் காண்டம்: 1 மண்டலம்: 2

# நாள் உரைக்கோவை வாசகங்கள் 1 முதல் 48 வரை

(1) விலங்குகளோடு விலங்குகளாக வாழும் மனிசனை; மனிசனோடு வாழும் மனிதனாக மாற்றிட மனதை உண்டாக்குவதே (இந்துவேதம்) அருளுலகம்.

(2) மனதைப் பண்படுத்துவதே அருளுலகம் (இந்துவேதம்).

(3) மனதைத் தூய்மைப் படுத்துவதே அருளுலகம் (இந்துவேதம்).

(4) மனதை வாய்மைப் படுத்துவதே அருளுலகம் (இந்துவேதம்).

(5) மனதிற்கு அமைதியைத் தருவதே அருளுலகம் (இந்துவேதம்).

(6) மனதிற்கு நிம்மதியைத் தருவதே அருளுலகம் (இந்துவேதம்).

(7) மனதிற்கு நிறைவைத் தருவதே அருளுலகம் (இந்துவேதம்).

(8) மனதிற்கு விடுதலையைத் தருவதே அருளுலகம் (இந்துவேதம்).

**குறிப்பு**:-

[அருளுலகம், அருள் வாழ்வு, அருளுலக வாழ்வு, அருளுலக வாழ்வியல் ... என்ற சொற்கள் மாறி மாறி இந்துவேத வாசகங்களில் பயன்படுத்தப்படுகின்றன. இது ஏடு பெயர்த்து எழுதியவர்கள், அதாவது நகல் எழுதியவர்கள் காலப்போக்கில் செய்த பிழையாக, தவறாக இருக்கலாம். இந்துவேதத்தின், அதாவது இருக்கு வேதத்தின் பல

காண்டங்களில் இதேபோல் ஒரே பொருளையுடைய சொற்கள் மாறி மாறி பயன்படுத்தப் பட்டிருப்பதை இந்துவேதத்தின் ஏடுகளில் காணலாம்.]

(9) மனிதத்தைக் காப்பதே அருள் வாழ்வு (இந்துவேதம்).

(10) மனிதத் தத்துவத்தை வளர்ப்பதே அருள் வாழ்வு (இந்துவேதம்).

(11) மனித உணர்வை விழிப்பாக வைத்திருப்பதே அருள் வாழ்வு (இந்துவேதம்).

(12) மனித உணர்வை செழிப்பாக வைத்திருப்பதே அருள் வாழ்வு (இந்துவேதம்).

(13) மனித உணர்வை சீராகச் செயல்படச் செய்வதே அருள் வாழ்வு (இந்துவேதம்).

(14) மனித அன்பை ஊற்றெடுக்கச் செய்வதே அருள் வாழ்வு (இந்துவேதம்).

(15) மனிதப் பற்றை விளைவிப்பதே அருள் வாழ்வு (இந்துவேதம்).

(16) மனிதப் பாசத்தை வளப்படுத்துவதே அருள் வாழ்வு (இந்துவேதம்).

(17) மனித நெஞ்சத்தைத் தரப்படுத்துவதே அருளுலக வாழ்வு (இந்துவேதம்).

(18) மனித நெஞ்சத்தைத் திரப்படுத்துவதே அருளுலக வாழ்வு (இந்துவேதம்).

(19) மனித நெஞ்சத்தைத் திறப்படுத்துவதே அருளுலக வாழ்வு (இந்துவேதம்).

(20) மனித நெஞ்சம் திறந்தேயிருக்கும்படிச் செய்வதே அருளுலக வாழ்வு (இந்துவேதம்).

(21) மனித நெஞ்சில் இரக்கவுணர்வு ஊற்றெடுக்கச் செய்வதே அருளுலக வாழ்வு (இந்துவேதம்).

(22) மனித நெஞ்சில் ஈகையுணர்வு ஊற்றெடுக்கச் செய்வதே அருளுலக வாழ்வு (இந்துவேதம்).

(23) மனித நெஞ்சில் அடைக்கல உணர்வை ஊற்றெடுக்கச் செய்வதே அருளுலக வாழ்வு (இந்துவேதம்).

(24) மனித உள்ளத்தின் ஆசைகளை மட்டுப்படுத்துவதே அருளுலக வாழ்வியல் (இந்துவேதம்).

(25) மனித உள்ளத்தின் உறவுணர்வை பயிராக்குவதே அருளுலக வாழ்வியல் (இந்துவேதம்).

(26) மனித உள்ளத்தில் நீதியை நிலைநாட்டுவதே அருளுலக வாழ்வியல் (இந்துவேதம்).

(27) மனித உள்ளத்தில் நேர்மையுணர்வை ஊற்றெடுக்கச் செய்வதே அருளுலக வாழ்வியல் (இந்துவேதம்).

(28) மனித உள்ளத்தில் பிற மனிதரை மதிக்கும் உணர்வை பயிராக்குவதே அருளுலக வாழ்வியல் (இந்துவேதம்).

(29) மனித உள்ளத்தில் பிறரோடு கூடிவாழும் உணர்வை விளைவிப்பதே அருளுலக வாழ்வியல் (இந்துவேதம்).

(30) மனித உள்ளத்தில் தன்மான உணர்வைத் தழைக்கச் செய்வதே அருளுலக வாழ்வியல் (இந்துவேதம்).

(31) மனித உள்ளத்தில் தன்னம்பிக்கை உணர்வைப் பிழைக்கச் செய்வதே அருளுலக வாழ்வியல் (இந்துவேதம்).

(32) மனித உள்ளத்தில் தனித்த இயல்புகளை [பாட வேறுபாடு => தனித்த இயல்புகளை = தனித்தப் பண்பியல்புகளை என்று சில ஏடுகளில் பாடவேறுபாடு இருக்கிறது அல்லது காணப்படுகிறது.] பேணி வளர்ப்பதே அருளுலக வாழ்வியல் (இந்துவேதம்).

(33) மனித உள்ளத்தில் பொறுப்புணர்வைப் பயிராக்குவதே அருளுலக வாழ்வியல் (இந்துவேதம்).

(34) மனித உள்ளத்தில் பொறுமையுணர்வை விளைவிப்பதே அருளுலக வாழ்வியல் (இந்துவேதம்).

(35) மனித உள்ளத்தில் நிதானப் போக்கையும், நோக்கையும் விளேவிப்பதே அருளுலக வாழ்வியல் (இந்துவேதம்).

(36) மனித உள்ளத்தில் சமாதான விருப்பத்தை விளேவிப்பதே அருளுலக வாழ்வியல் (இந்துவேதம்).

(37) மனித உள்ளத்தில் அழகுணர்ச்சியைத் தொடர்ந்து விளேவிப்பதே அருளுலக வாழ்வியல் (இந்துவேதம்).

(38) மனித உள்ளத்தில் தொடர்ந்து தோழமை உணர்வை வளர்த்துக் கொண்டேயிருப்பதே அருளுலக வாழ்வியல் (இந்துவேதம்).

(39) மனித உள்ளத்தில் நட்புணர்வை தொடர்ந்து விளேவித்துக் கொண்டே இருப்பதே அருளுலக வாழ்வியல் (இந்துவேதம்).

(40) மனித உள்ளத்தில் தொண்டுணர்வுகளே தொடர்ந்து விளேவித்துக் கொண்டேயிருப்பதே அருளுலக வாழ்வியல் (இந்துவேதம்).

(41) மனித உள்ளத்தில் அறிவுக்கு அப்பாற்பட்டனவற்றில் அக்கறையையும், ஆர்வத்தையும் தொடர்ந்து வளர்த்துக் கொண்டேயிருப்பதே அருளுலக வாழ்வியல் (இந்துவேதம்).

(42) மனித உள்ளத்தில் எதையும் தொடர்ந்து பயிற்சி செய்து பார்ப்பதில் அக்கறையையும், ஆர்வத்தையும் நிலேயாக வளர்த்துக் கொண்டேயிருப்பதே அருளுலக வாழ்வியல் (இந்துவேதம்).

(43) மனித உள்ளத்தில் எதையும் தொடர்ந்து முயற்சி செய்து பார்ப்பதில் அக்கறையையும், ஆர்வத்தையும் நிலேயாக வளர்த்துக் கொண்டேயிருப்பதே அருளுலக வாழ்வியல் (இந்துவேதம்).

(44) மனித உள்ளத்தில் எந்தத் தேர்ச்சி கிடைத்தாலும், அத்தேர்ச்சிக்குத் தொடர்ச்சியாக பயிற்சிக்குரிய முயற்சிகளேத் தொடர்ந்து செய்யுமாறு ஊக்குவித்துக் கொண்டிருப்பதே அருளுலக வாழ்வியல் (இந்துவேதம்).

(45) மனித உள்ளத்தில் எத்தகைய முதிர்ச்சி கிடைத்தாலும், அதனுல் தளர்ச்சியோ, அயர்ச்சியோ அடைந்து விடாமல் தொடர்ந்து

பாதுகாத்து ஊக்குவித்து உற்சாகப்படுத்துவதே அருளுலக வாழ்வியல் (இந்துவேதம்).

(46) மனித உள்ளத்தில் ஏக்கத்தாலும், ஏமாற்றத்தாலும் ஏற்படும் எரிச்சலால் தேக்கமும், வீக்கமும், முடக்கமும், அடக்கமும், ஒடுக்கமும் ஏற்பட்டு விடாமல் காப்பதே அருளுலக வாழ்வியல் (இந்துவேதம்).

(47) மனித உள்ளத்தில் தோல்வியும், தொல்லேயும், துன்பமும் உருவாக்கும் தொய்வையும், தேய்வையும், மாய்வு நிலேக்குக் கொண்டு சென்றுவிடாமல் காப்பதே அருளுலக வாழ்வியல் (இந்துவேதம்).

(48) மனித உள்ளத்தில் வறுமை, வெறுமை, அடிமை, மிடிமை, இல்லாமை, இயலாமை முதலியவற்றுல் இழிவழிவில் நாட்டமும், நம்பிக்கையும் ஏற்பட்டு விடாமல் தடுத்துக் காப்பதே அருளுலக வாழ்வியல் (இந்துவேதம்).

<u>குறிப்பு</u>:-

இந்துமத ஆண்டு 43,73,095 திருபவ ஆண்டு ஆடித் திங்கள் 12ஆம் நாள் வியாழக் கிழமை காலேயில் சுமார் 8.30 மணியளவில் தாத்தா கருவூர்த் தேவரும், தாத்தா திருமாளிகைத் தேவரும் பொன்னேரி, 13 என்.சி.ஓ. நகர் (N.G.O.Nagar) தென்றல் இல்லம், பதினெண்சித்தர் மடம் அறக்கட்டளே அலுவலகத்தில் எழுந்தருளி இன்றைய ஞாலகுரு, குவலய குருபீடம், இந்துமத முழுமுதல் தலேமை ஆச்சாறியார், இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி, குருமகா சன்னிதானம், சித்தர் அரசயோகிக் கருவூரார், குருதேவர், ஞானத் தந்தை, பரபிறம்மம், அருட்கொடை வள்ளல், அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியார் அவர்களிடம் பரிந்துரை உரையாடல் நிகழ்த்தியதன் பேரில் அவர், சித்தர் தேரையரின் மூத்த மகள் சித்தர் நான்வேதமுடையார்,

அருள்மிகு தில்லைக்காளியம்மன் சன்னிதானம் கவிதாவை திருவோலை நாயகமாகச் செயல்படச் செய்து இருக்கு வேதத்தின் காண்டம் ஒன்றில் (1) மண்டலம் இரண்டில் (2) உள்ள நாள் உரைக்கோவை வாசகங்கள் ஒன்று முதல் நாற்பத்தெட்டு (48) முடிய எழுதப்பட்டுள்ளன.

**எழுதி முடித்த நேரம்:** மதியம் 12:10; அதாவது 10:50 மணிக்கு பொன்னேரியிலிருந்து சென்னைக்கு புறப்பட்ட புறநகர் மின்சார இருப்புப்பாதை வண்டியிலும் தொடர்ந்து எழுதப்பட்டு, சென்னை மத்திய இரயில் நிலையத்தில் முடிக்கப்பட்டது.

திருவோலை நாயகம்: **சித்தர் நான்வேதமுடையார், 28-7-1994.**

**ஒப்பம்**
**அன்பு - சித்தர்**
**தலைவர், குருதேவர், ஞானத்தந்தை,**
**அந்தணர் அண்ணல்,**
**ஞானாச்சாரியார்.**

**//உண்மை நகல்//**
**//மூல நகல்: சித்தர் நான்வேதமுடையாரின் கையெழுத்தில் இருந்தது. இறுதியில் குருதேவர் அவர்களின் கையொப்பம் இருந்தது.//**

# குருபாரம்பரிய வாசகங்கள்

"தன்னை அறிந்தால் தலைவனை அறியலாம்;
தலைவனை அறிந்தால் தன்னை அறியலாம்."

"தன்னை அறியும் அறிவே மெய்யறிவு;
பின்னை அறிவு பேயறிவு."

"தனக்குள் குருதேவர் என்பதையோ அன்றிக்
குருதேவருக்குள் தான் என்பதையோ புரிந்திடுக.
தெரியாதன புரியாதன இல்லை யாகிடும்."

"பொன்னையும் ஓட்டையும் ஒக்கவே நோக்குவார்,
தன்னோடு அனைத்தையும் காணிக்கை ஆக்குதலால்
குருவோடு இரண்டறக் கலந்து உய்வர்."

"பெற்றதைப் போற்றிட குருவோடு கலத்தலே
நற்றவமாய் ஏற்பாரே எய்துவர் அனைத்தும்."

"காலையிலும், இரவிலும் கணக்காகப் பாங்கோடு
உண்டியைப் புசித்திட ஏங்கிய நிலையனைத்தும் நீங்கிடும்."

**//மதுரைச் சித்தரடியான் ஒருவருக்கு 23-06-1988இல் குருதேவர் எழுதிய அஞ்சலிலிருந்து எடுக்கப்பட்ட சில குருபாரம்பரிய வாசகங்கள்.//**





தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் (கி.பி.785 - 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

"இந்துக்கள் கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்."

\- குருபாரம்பரிய வாசகம்.

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam Trust,** (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://gurudevar.in
https://induism.org
https://books.gurudevar.org
https://gurudevar.org
Email: indhuism@gmail.com

காணிக்கை ரூ.10/-